கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in


---

பெறுநர், தேதி: 05.12.2023
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உலக மண் தினம் 2023

உலக மண் தினம் 2023 குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, ‘‘இயற்கை வள மேலாண்மை இயக்ககத்தின் முதுகலை மற்றும் முனைவர் பட்ட மாணவர்களின் பேரணி’’ மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையின் மூலம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் நடத்தப்பட்டது. இந்த பேரணியை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர், முனைவர் வெ. கீதாலட்சுமி அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

உலக மண் தினத்தை முன்னிட்டு 05.12.2023 அன்று தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக இயற்கை வள மேலாண்மை இயக்ககத்தின் மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையில் முனைவர். பி.இராமமூர்த்தி அவர்களின் பன்னிரெண்டாவது நினைவு விரிவுரை முனைவர். இரா.தமிழ்வேந்தன், பதிவாளர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

முன்னதாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஆர்.சாந்தி அவர்கள் வரவேற்புரையாற்றினார். முனைவர் ம. இளையராஜன் பேராசிரியர் (மண்ணியல்) அவர்கள் தனது அறிமுக உரையில் மண் வள ஆராய்ச்சி, மண் வளம் மற்றும் பயிரின் தேவைக் கேற்ற உரப்பரிந்துரையில் முனைவ் பி.இராமமூர்த்தி அவர்களின் பங்களிப்பு பற்றி எடுத்துரைத்தார்.

முனைவர் ப.பாலசுப்பிரமணியம், இயக்குநர் (இயற்கை வள மேலாண்மை) அவர்கள் அறிமுக உரை வழங்கி, தொலையுணர்வு மற்றும் புவியியல் தகவல் தொழில்நுட்பங்களை மண்ணியல் துறைக்கு எவ்வாறு பயன்படுத்துவது என்றும் விளக்கினார்.

முனைவர் இரா.தமிழ்வேந்தன், பதிவாளர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர் அவர்கள் மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை குறித்த சிறு நூலினை வெளியிட்டு, 2023 உலக மண் தினத்தினை முன்னிட்டு நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கினார். தனது தலைமையுரையில் மண்ணியல் துறையில் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பங்களின் பயன்பாடு குறித்து எடுத்துரைத்தார்.

மேலும் 2023 உலக மண் தினத்தின் **கருத்துரு "மண் மற்றும் நீர்: உயிரின் ஆதாரம்"** என்பது பற்றி குறிப்பிட்டு, மண் மற்றும் நீரின் முக்கியத்துவம் குறித்து இலக்கியங்கள் மற்றும் திருக்குறளை மேற்கோள் காட்டி விளக்கினார். இந்த மண் தினமானது விழிப்புணர்வு ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

முனைவர் சி. பழனிசாமி முதன்மை விஞ்ஞானி மற்றும் முன்னாள் தலைவர் பயிர் உற்பத்தி, கரும்பு இனப்பெருக்க நிறுவனம் அவர்கள் "பயிர் மற்றும் மண் வள மேலாண்மையில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு பயன்பாடு" என்ற தலைப்பில் உரையாற்றினார். அவர் தனது விரிவுரையில் தொலையுணர்வு மற்றும் புவியியல் தகவல் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி மண் வரைபடங்களை தேவைகேற்ற பயன்பாட்டிற்கு உருவாக்குதல், துல்லிய பண்ணையத்தில் பயிர்ச்சத்து மற்றும் நோய் மேலாண்மை பற்றி விளக்கமளித்தார். மேலும் செயற்கை நுண்ணறிவு மூலம் மண்ணின் தன்மைகள் மற்றும் பயிர் மகசூல் பற்றி முன்கூட்டி எவ்வாறு கணிக்கலாம் என்றும் எடுத்துரைத்தார்.

இந்நினைவு விரிவுரையின் இறுதியில் மண்ணியல் துறையின் பேராசிரியர் முனைவர் சு. மரகதம் நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பாரத ஸ்டேட் வங்கி கோயம்புத்தூர் அதிகாரிகள் கலந்துகொண்டனர். விஞ்ஞானிகள் மற்றும் மாணவர்களோடு சேர்த்து மொத்தமாக 140 பேர் பயனடைந்தனர்

**மக்கள் தொடர்பு அலுவலர்**